MOGAPPAIR TIMES



## Annual Day At Aura Kidz!

Aura Kidz pre school celebrated their Annual Day on 20th March. The kids exhibited their talents. They performed Group Dance, Fancy Dress, Skit, Yoga, Little chef and Group Song. Aura Kidz preschool children are prooved their multi talented in this show.

## வேலம்மாள் கல்லூரியில்




வேலம்மாள் தொழில்நுட்பக் கல்லூரியின் கணினிப் பொறியியல் துறை சார்பாக தேசிய அளவிலான கருத்தரங்கு ஒன்று சனிக் கிழமையன்று நடைபெற்றது. சாணக்யா 2015 என்ற இக்கருத்தரங்குக்கு கல்லூரி முதல்வர் சந்திரசேகர் தலைமை வகித்தார்.




சிறப்பு விருந்தினராகப் பங்கேற்றுப் பேசிய வெரிஸோன் டேட்டா சர்வீஸஸின் தலைமை அதிகாரி ஆல்ஃபிரட் தேவநேசன் சாமுவேல், ‘‘கணிப்பொறி அறிவியல் துறையில் புதிய கண்டுபிடிப்புகளின் பங்களிப்பு மற்றும் அவற்றின் முக்கியத்துவம் பற்றி விரிவாக எடுத்துரைத்தார். பல்வேறு மாநிலங்களைச் சேர்ந்த 300-க்கும் மேற்பட்ட மாணவர்கள் இந்நிகழ்ச்சியில் பங்கேற்று, தங்கள் படைப்புகளைப் பார்வைக்கு வைத்திருந்தனர். அவை வல்லுநர்களால் பகுப்பாய்வு செய்யப்பட்டு, தகுதியானவற்றுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன.